Untouchability

* 6 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to Unstarred Question No. 7 placed on the Table of the House on 24th March 1958, the reasons for not appointing so far any officers to enforce the provisions of Untouchability (Offences) Act of 1955 at the district, taluk and village levels?

THE HON. SRI P. KAKKAN : The attention of the hon. Member is invited to section 15 of the Untouchability (Offences) Act, 1955, according to which all the offences under the Act are cognizable. As such, the enforcement of the Act is done by the Police, and there is no need for appointment of any other officers specially for the enforcement of the Act.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, தீண்டாமை (குற்றச்) சட்டமானது கடந்த மூன்று வருஷ காலமாக அமுலில் இருந்த போதிலும், போலீஸ் படையினுல் நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் சரிவர அமுல் நடத்தப்படவில்லை. அதன் காரணமாக, கிராமப் புறங்களில் தீண்டாமைக் குற்றமானது இன்னும் கிஞ்சித்தேனும் குறையவில்லை. எனவே, சர்க்கார் இனிமேலாவது இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு என்றே பிரத்தியேகமாக சிப்பந்திகளைக் நியமித்து, அவர்கள் மூலமாக தீண்டாமைக் குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதில் போலீஸ் அதிகாரிகள் செய்ய முடியாததை கிராமவாசிகள் செய்ய முடியாது என்பது என்னுடைய கருத்து. இப்பொழுது இருக்கிற முறையில் போனால்தான் ஹரிஜன மக்களுக்குச் சாதகம் ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI K. B. S. MANI : இதுவரையில், இந்த மாகாணத்தில், போலீஸ் அதிகாரிகள் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எத்தனை கேஸ்கள் நடத்தி, எத்தனை குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் ? தண்டனை கொடுக்கப்பட்டிருந்தால், தண்டனை பெற்றவர்கள் செய்த குற்றங்களுடைய தரங்கள் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

SRI P. G. MANICKAM : கிராமப் புறங்களில் இருக்கும் காப்பி ஹோட்டல்களில் இன்னும் தீண்டாமை ஒழிந்தபாடில்லை. ஆகையால், அந்த இடங்களில் தீண்டாமையை ஒழிப்பதற்கு சர்க்கார் போலீஸ் அதிகாரிகள் மூலமாக தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கிராமப் புறங்களில் எங்கெங்கே ஹரிஜன மக்கள் அனுமதிக்கப்படவில்லையோ அங்கே தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டும் வருகிறார்கள். எங்காவது தகராறு இருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் இருந்து, அதைத் தெரிவித்தால், தக்க ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. P. PERIASAMI : கனம் தலைவர் அவர்களே, சேலம் ஜில்லா, ஆத்தூர் தாலூகா, சார்வாய்ப்புதூர் கிராமத்திலே ஹரிஜனங்கள் வண்டியிலே போகமுடியாதபடி இரண்டு மூன்று தடவை கலகம் ஏற்பட்டு, அது சம்பந்தமாக கலெக்டருக்கும், அரசாங்கத்திற்கும், மற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் விண்ணப்பம் போடப்பட்டிருக்கிறது. எம்.எல்.ஏ. போய்ப் பார்த்தும் இன்னும் தகராறு நடந்து கொண்டிருக்கிறது. அந்த விஷயம், கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்தால்

3rd September 1958]

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி இல்லாவிட்டால், உடனடியாக அந்த ஹரிஜனங்களுக்கு ஆதரவு கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தயவு செய்து தனிக்கேள்வி போடலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் இம்மாதிரி குற்றங்களைக் கண்டித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஹரிஜனங்களுக்கென்று தனியாக சேரிகளை அமைப்பது, குடி தண்ணீர் கிணறுகளை வெட்டுவது என்று இருப்ப தானது சர்க்காரையும் இவ்விஷயத்தில் ஒரு குற்றவாளி என்று ஏற்படுத்தி விடும் அல்லவா ?

MR. SPEAKER : The question is out of order.

Bus service

*7 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, சின்னமனூரிலிருந்து சிப்பாலகோட்டைக்கு பஸ் விட வேண்டுமென கலெக்டர் முதலானோர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளனரா ?

(ஆ) அப்படியானால், அதுசம்பந்தமாய் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

Prohibition offences

*8 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுவிலக்குக் குற்றங்களில் தண்டனை பெறுபவர்களின் பெயர் விவரங்களை ஜில்லா கெஜெட்டுகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the answer is in the negative.

SRI M. S. SELVARAJAN : சார், மதுவிலக்குக் குற்றவாளியாக இருக்கும் மானமுள்ள ஒருசிலரையாவது திருத்துவதற்காக இம்மாதிரியான வேறு திட்டங்களையாவது அரசாங்கம் பரிசீலனை செய்கிறதா அல்லது செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மது விலக்குக் குற்றம் செய்தவர்களுக்குக் கோர்ட்டுகள் தண்டனை கொடுக்கிறது. அவர்கள் பெயர்களை கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை யென்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

Sales tax

*9 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைசசர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, தேனீயில் (அ) சென்ற ஆண்டு (1957–58), (ஆ) இந்த ஆண்டு (1958-ம் ஸ்ரீ ஏப்ரல்மீ 30உ வரை) விற்பனை வரி மூலம் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

	RS.	NP.
1957–58	3,05,843	52
April 1958	14,153	28